




# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



செவ்வாய், ஆகஸ்ட் 24.2021 | மயிலாடுதுறை | மலர்:08 இதழ்:06


# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் செயல்படும் கொரோனா தடுப்பூசி முகாமினை

# மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தொடங்கி வைத்தார்.



மயிலாடுதுறையில் கொரோனா தடுப்பூசி மையத்தினை மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா தொடங்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது. மயிலாடுதுறை மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி முகாமானது அங்காங்கே நடத்தப்பட்டு வருகிறது. அதில் பொதுமக்கள் ஆர்வத்துடன் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்கின்றனர். அந்தவகையில் தமிழக முதலமைச்சரின் உத்தரவிற்கிணங்க மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் செயல்படும் கொரோனா தடுப்பூசி மையமானது தொடங்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் 24 மணி நேரமும் பொதுமக்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்ளலாம். மயிலாடுதுறை மாவட்டத்தில் முதல் தவணை தடுப்பூசி 2 லட்சத்து 15 ஆயிரத்து 931 நபர்களும், 2 ஆம் தவணை தடுப்பூசி 35 ஆயிரத்து 387 நபர்களும் ஆக மொத்தம் 2 லட்சத்து 51 ஆயிரத்து 318 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசியை பொறுத்தவரை தேவைகேற்ப போதுமான அளவு கையிருப்பு உள்ளது. பொதுமக்கள் எந்தவித தயக்கமின்றி தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் சுகாதாரத்துறை இணை இயக்குநர் மரு.மகேந்திரன், மயிலாடுதுறை வட்டார மருத்துவ அலுவலர் மரு.சரத்சந்தர் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டர்.

## 8 நாட்களுக்கு பிறகு கடலுக்கு சென்ற மயிலாடுதுறை மீனவர்கள்



மயிலாடுதுறை மாவட்டத்தில் அரசால் தடைசெய்யப்பட்ட சுருக்குமடிவலை எதிர்ப்பு மற்றும் சுருக்குமடி வலை ஆதரவு மீனவர்களிடையே பிரச்சனை நீண்டகாலமாக உள்ளது. இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் 14 ஆம் தேதி பூம்புகார், திருமுல்லைவாசல், சந்திரபாடி கிராம மீனவர்கள் தடையை மீறி சுருக்குமடி வலையுடன் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இதனை அறிந்த தரங்கம்பாடி தலைமையிலான சுருக்குமடி வலை எதிர்ப்பு மீனவர்கள் தங்களது பைபர் படகுகளில் சென்று அவர்களை மறிக்க முயன்றனர். இந்தப் பிரச்சனையின் போது போது திருமுல்லைவாசல் விசைபடகு வானகிரி பைபர் படகு மீது மோதி பைபர் படகு முழுவதும் சேதமடைந்தது. மேலும் படகில் இருந்த 3 மீனவர்கள் காயமடைந்து சிகிச்சைக்கு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த வானகிரி மீனவர்கள் வானகிரிக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த பூம்புகார் கிராமத்தை சேர்ந்த நான்கு பைபர் படகுகளுக்கு தீ வைத்து கொளுத்தினர். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் சுருக்குமடி வலைக்கு எதிரான தரங்கம்பாடி தலைமையிலான மீனவ கிராம நிர்வாகிகள் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதாவிடம் பைபர் படகை மோதி மீனவர்களை காயப்படுத்திய விசைபடகை பறிமுதல் செய்ய வேண்டும். காயமடைந்த மீனவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க வேண்டும், அரசால் தடைசெய்யப்பட்ட வலைகள், அதிவேக எஞ்சின் பொருத்தப்பட விசைப்படகுகள் அனைத்தையும் பறிமுதல் செய்ய வலியுறுத்தி வருகின்ற 20 ஆம் தேதி வரை தொழில் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவது, நடவடிக்கை எடுக்கப்பாடாத பட்சத்தில் ஆகஸ்ட் 21 ஆம் தேதி நாகை, காரைக்கால், மயிலாடுதுறை ஆகிய மூன்று மாவட்ட மீனவர்கள் இணைந்து போராட்டம் நடத்தப்படும் என்பது அடங்கிய மனுவை அளித்து தொழில் மறியலில் ஈடுபட்டு வந்தனர். தொடர்ந்து பைபர் படகை மோதிய விசைப்படகு மற்றும் சுருக்கு மடி வலையை போலீசார் பறிமுதல் செய்தனர். இந்நிலையில் சுருக்குமடி வலைக்கு எதிரான தரங்கம்பாடி தலைமையிலான மீனவப் பஞ்சாயத்தார்கள் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதாவை சந்தித்தனர். அப்போது அரசால் தடை செய்யப்பட்ட வலையை கொண்டு மீன் பிடிக்க அனுமதி கிடையாது என்றும், தடையை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு மீன்பிடிக்க மீனவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் லலிதா அறிவுறுத்தினார், இதனைத் தொடர்ந்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்த 20 மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் தொழில் செய்ய கடலுக்கு செல்வதாக கூறினர். இதன் மூலம் கடந்த எட்டு நாட்களுக்கு பின்னர் மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

## கொரோனா தொற்றின் மூன்றாவது அலை முன்னெச்சரிக்கை நடவடிக்கை

# கோயில் வாசலில் தாலிக்கட்டிக் கொண்ட மணமக்கள்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த வைத்தீஸ்வரன் கோயிலில் வைத்தியநாதசுவாமி உடனாகிய தையல்நாயகி அம்பாள் ஆலயத்தில் திருமணம் நடத்தினால் தோஷங்கள் நீங்கும் என்பது ஐதீகம், இதனால் அங்கு அதிகளவு ஆவணி மாதங்களில் திருமணம் நடைபெறுவது வழக்கம். இந்நிலையில் திருமணம் நடத்த முடிவு செய்தவர்கள் கோயில் மூடப்பட்டு அனுமதி மறுத்ததை அடுத்து கோபுர வாசலில் நின்று புதுமண தம்பதியினர் உறவினர்கள் சூழ, வேத விற்பன்னர்கள் வேத மந்திரம் முழங்க மங்கல வாத்தியங்கள் முழங்க மாலை மாற்றி தாலி கட்டிக் கொண்டனர். பின்பு திருமண மண்டபங்களுக்கு சென்று தங்களது சம்பிர்தாய நிகழ்வுகளை செய்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக மயிலாடுதுறை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் எண்ணிக்கையானது அதிகரிக்க தொடங்கி மாவட்டத்தில் கொரனோ வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்து 567 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 21 ஆயிரத்து 22 பேர் சிகிச்சை பெற்று குணமாகி வீடு திரும்பியுள்ளனர். மேலும் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 271 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் சிகிச்சை பலனின்றி 274 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் மூன்றாம் அலை பரவாத வண்ணம் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் பல்வேறு கட்ட நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்து வருகிறது. இதுபோன்ற வேலையில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை தாண்டி மக்கள் கூடி வருவதை காண முடிவதாகவும் இதனால் வைரஸ் தொற்று மீண்டும் மாவட்டத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வேதனை தெரிவிக்கும் சமூக ஆர்வலர்கள் இதுபோன்ற சுபநிகழ்ச்சிகளை கண்காணிக்க தனி அதிகாரிகளை நியமித்து அங்கு கொரோனா கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

### மயிலாடுதுறை மாவட்டத்தில்
# வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள்
### தொடர்பான ஆய்வுக் கூட்டம்




மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தலைமையில் நடைபெற்றது. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக எடுத்து கூறப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது., எதிர்வரும் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை தொய்வின்றி செய்திட வேண்டும், அந்தவகையில் காவல்துறையை பொருத்தமட்டில் காவல் தீயணைப்பு, கடலோர காவல்படை, பேரிடர் மீட்பு படை, ஊர் காவல் படை, தேசிய மாணவர் படை ஆகிய பிரிவினரை ஒருங்கிணைத்து மீட்பு பணிகளில் ஈடுபட தயார் நிலையில் இருக்க வேண்டும். வருவாய் கோட்டாட்சியர்கள், வருவாய் கோட்ட அலுவலகங்கள் மற்றும் வட்ட அலுவலங்களில் கட்டுப்பாட்டு அறை துவங்கி 24 மணி நேரம் சுழற்சி பணியில் அலுவலர்களை நியமனம் செய்திட வேண்டும். பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு, காவேரி கோட்டம்) தேவையான மணல் மூட்டைகள், மணல் ஆகியவைகளை கையிருப்பு வைத்திட வேண்டும். தாழ்வான பகுதிகளை முன்கூட்டியே கண்காணித்து அவற்றை வலுப்படுத்திட சவுக்கு கம்புகள், மணல் மூட்டைகளை அப்பகுதிகளில் இருப்பு வைத்திட வேண்டும். நெடுஞ்சாலைத்துறையினர் மரம் அறுக்கும் கருவிகளை தேவையான அளவு கையிருப்பு வைத்திட வேண்டும். மின்சாரத்துறையினர் தாழ்வாக தொங்கும் மின்சார கம்பிகளை சரிசெய்திட வேண்டும். தேவையான அளவு மின்கம்பங்கள் கையிருப்பு வைத்திட வேண்டும். வேளாண் பொறியியல்துறையினர் டிராக்டர்கள், ஜேசிபி போன்றவைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். சுகாதாரத்துறையினர் தொற்றுநோய் மருந்துகளை தேவையான அளவு இருப்பு வைத்திட வேண்டும். அவசர ஊர்திகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கூட்டுறவுத்துறையினர் நியாய விலைக்கடைகளில் மூன்று மாதங்களுக்கு தேவையான குடிமை பொருட்கள் கையிருப்பு வைத்திட வேண்டும். நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் மேல்நிலை குடிநீர் தேக்க தொட்டிகளை தினசரி சுத்தம் செய்து, தேவையான அளவு குளோரின் கலந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட வேண்டும். வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளையும், அலுவலர்கள் முன்கூட்டியே செய்திட வேண்டும் ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சுகுணா சிங் மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், மாவட்ட ஆட்சியரின்நேர்முக உதவியாளர் வைத்தியநாதன், வருவாய் கோட்டாட்சியர்கள் பாலாஜி, நாராயணன், மாவட்ட ஆட்சியரக மேலாளர் சங்கர், தனி வட்டாட்சியர் பேரிடர் சபிதா தேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## செம்பனார்கோவிலில் விசிக சார்பில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்..



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவிலில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர்.திருமாவளவன் பிறந்த நாளை முன்னிட்டு அக்கட்சி சார்பில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் செம்பனார்கோவில் விடுதலை சிறுத்தை கட்சி ஒன்றிய பொறுப்பாளர் யோ.ஸ்டாலின் தலைமை வகித்தார். விசிக மாநில தேர்தல் பணிக்குழு நிர்வாகி ஆக்கூர் செல்வ அரசு, மயிலாடுதுறை நாடாளுமன்ற விசிக செயலாளர் கதிர்வளவன் இஸ்லாமிய ஜனநாயக பேரவை மாநில துணைத் செயலாளர் ரியாஸ் கான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கே.எஸ். பாலா வரவேற்று பேசினார்.இந்நிகழ்ச்சியில் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன் கலந்துகொண்டு ஏழை எளிய மக்களுக்கு மரக்கன்றுகள் மற்றும் உணவு பொட்டலங்கள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். இதில், செம்பை தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் அப்துல் மாலிக், திமுக மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், விசிக ஒன்றிய பொறுப்பாளர்கள் பெருவழுதி, கனிவளவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் சங்கை நவீத் நன்றி கூறினார்.

### மயிலாடுதுறை;சாலை அமைக்கும் பணி: அரசுப் பணம் மோசடி;
## ஒன்றிய ஆணையர் உட்பட 7 பேர் சஸ்பெண்ட்




மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் பல லட்ச ரூபாய் மோசடிப் புகார் காரணமாக, விசாரணை அடிப்படையில் ஒன்றிய ஆணையர், பொறியாளர்கள் உள்ளிட்ட ஏழு பேரை பணியிடை நீக்கம் செய்து மாவட்ட ஆட்சியர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த ஜூன் மாதம் 28 ம் தேதி ஒன்றியக்குழுத் தலைவர் காமாட்சி மூர்த்தி தலைமையில் ஒன்றியக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், ஊராட்சி ஒன்றிய நிதியின்கீழ் நடைபெற்ற பல்வேறு பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகப் புகார் எழுந்தது. சாலை உள்ளிட்ட பல்வேறு ஊராட்சி வளர்ச்சிப் பணிகளைச் செய்யாமலேயே கணக்கு காட்டப்பட்டுள்ளது. மேலும் ஒரே பணியை இரண்டு பெயரில் பில் போட்டு மோசடி செய்ததாகவும், இதனால் 1.38 கோடி ரூபாய் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது எனத் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்ற ஆதாரத்துடன் கவுன்சிலர்கள் குற்றம்சாட்டினர். இதையடுத்து சென்னை கண்காணிப்பு பொறியாளர் சரவணகுமார், திருவாரூர் மகளிர் திட்ட இயக்கநர் ஸ்ரீலேகா இருவரும் இரண்டு நாள்கள் விசாரணை மேற்கொண்டு, கணக்கு வழக்குகளை ஆய்வு செய்ததில் 25,82,606 ரூபாய் மோசடி நடைபெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து ஊரக வளர்ச்சித்துறை முறைகேடு குறித்து ஒன்பது பேர் மீது நடவடிக்கையெடுக்க மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரைத்தனர். அதையடுத்து விசாரணை அறிக்கை அடிப்படையில் முறைகேடு நடைபெற்றதாகக் குற்றம்சாட்டப்பட்ட மாதங்களில் பணியிலிருந்த ஒன்றிய ஆணையர் சரவணன், ஊராட்சி ஒன்றிய உதவிப் பொறியாளர்கள் கிருஷ்ணகுமார், தெய்வானை, பூரணச்சந்திரன், ஒன்றியப் பணி மேற்பார்வையாளர்கள் அன்பழகன், அகிலா, ராஜ்குமார் ஆகியோரை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதா பணியிடை நீக்கம் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும் இரண்டு உதவி கோட்டப் பொறியாளர்கள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவம் மயிலாடுதுறை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மயிலாடுதுறை மாவட்டம் காளி கிராமத்தில் 2 இடங்களில் பொதுமக்கள் சாலை மறியல்..



மயிலாடுதுறை அருகே காளி கிராமத்தில் 100 நாள் வேலை திட்டத்தின்படி சரிவர பணி வழங்கப்படாதது கண்டித்து அந்த திட்ட பணியாளர்கள் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 100 நாட்கள் கூலி வேலை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். கடந்த ஆட்சியில் இது 150 நாட்களாக உயர்த்தி வேலை வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ஆனால் காளி ஊராட்சியில் கடந்த ஜனவரி மாதம் முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் மிகக்குறைந்த அளவிலேயே தொழிலாளிகளுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. மாதத்தில் ஒரு வாரத்திற்கு கூட வேலை வழங்கப்படுவது இல்லை. இதனால் கூலித்தொழிலாளர்கள் வருமானம் இன்றி அவதிப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் பலமுறை புகார் தெரிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே நாங்கள் சாலை மறியலில் ஈடுபட்டோம் என்றனர். இதுகுறித்து தகவல் அறிந்த மணல்மேடு போலீசார் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதில் உடன்பாடு ஏற்பட்டதால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். தரமற்ற அரிசி ரேஷனில் வழங்குவதாக கூறி: காளி கிராமத்தில் ரேஷன் கடையில் தரமற்ற அரிசி வழங்கப்படுவதாக கூறி பொதுமக்கள் அரசு பஸ்சை சிறைபிடித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் மணல்மேடு போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது போலீசார் வட்ட வழங்கல் அலுவலரிடம் தொலைபேசியில் பேசினர். இதையடுத்து இனிவரும் காலங்களில் ரேஷன் கடையில் தரமான அரிசி வழங்கப்படும் என வட்ட வழங்கல் அதிகாரி தெரிவித்ததாக பொதுமக்களிடம் போலீசார் எடுத்துக் கூறினர். இதனையடுத்து பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். ஒரே ஊராட்சியில் வெவ்வேறு பகுதிகளில் 2 இடங்களில் சாலை மறியல் போராட்டம் நடந்ததால் அந்த பகுதி முழுவதும் பரபரப்பாக காணப்பட்டது. இந்த சாலை மறியல் போராட்டங்களால் காளி— மணல்மேடு சாலையில் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## தியேட்டர்கள் திறக்கப்படாததால் ரசிகர்கள் ஏமாற்றம்



மயிலாடுதுறை:தற்போது கொரோனா வைரசின் தாக்கம் குறைந்து வருவதால் தியேட்டர்களை 50 சதவீத ரசிகர்களுடன் திறக்க அரசு அனுமதி வழங்கியது. இதனால் நேற்று தியேட்டர்கள் திறக்கப்படும் என ரசிகர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். ஆனால் மயிலாடுதுறை நகரில் உள்ள 4 தியேட்டர்கள் மற்றும் சீர்காழி பகுதியில் 3 தியேட்டர்கள் திறக்கப்படவில்லை. சீர்காழியில் தியேட்டர்கள் உள்ளன. ஆனால் மூன்று தியேட்டர்களும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்து திறக்கப்படாமல் பூட்டியே உள்ளது. நேற்று தியேட்டர்கள் திறந்திருக்கும் என்ற நம்பிக்கையில் ரசிகர்கள் படம் பார்க்க தியேட்டருக்கு சென்றனர். ஆனால் தியேட்டர்கள் பூட்டி கிடைத்ததைக் கண்டு ஏமாற்றத்தோடு திரும்பி சென்றனர். மயிலாடுதுறை பகுதியில் உள்ள தியேட்டர்களில் நேற்று முன்தினம் பராமரிப்பு பணி நடைபெற்றது.

## குத்தாலம் அருகே அசிக்காட்டில் வீதியில் நெல்லை கொட்டி விவசாயிகள் போராட்டம்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா, அசிக்காடு, செங்குடி, முருகன் தோட்டம் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதியில் விளைவிக்கப்படும் நெல்லை ஆண்டுதோறும் அசிக்காட்டில் திறக்கப்படும் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் விற்பனை செய்து வந்தனர். ஆனால் இந்த ஆண்டு அறுவடை பணிகள் நடைபெற்று வரும் நிலையில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை அரசின் நேரடி கொள்முதல் நிலையம் அசிக்காட்டில் திறக்கப்படவில்லை. இந்தநிலையில் விவசாயிகள், கடந்த 20 நாட்களுக்கு மேல் தாங்கள் அறுவடை செய்த நெல் மூட்டைகளை கடந்த ஆண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கிய இடத்தில் அடுக்கி வைத்து காத்திருக்கின்றனர். தெருவில் நெல்லை கொட்டி போராட்டம்அவ்வப்போது மழை பெய்து வரும் நிலையில் வாடகைக்கு தார்ப்பாய்கள் எடுத்து மூடி நெல்லை விவசாயிகள் பாதுகாத்து வருகின்றனர். 20நாட்களுக்கு மேலாகியும் தங்களது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காததால் ஆத்திரமடைந்த விவசாயிகள், நெல்லை அசிக்காடு கடைத்தெரு வீதியில் கொட்டி கோஷங்கள் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அகர முதல
தொடர்புக்கு 9597887847 8870884969
aagaramuthala@gmail.com
Aagaramuthalaa
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு